6th August 1966]

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under examination.

திரு. வை. சங்கரன் : குறிப்பாக சில முனிசிபாலிட்டிகள் தாங்களே கல்விக்காக பூராவும் செலவழித்து இந்தப் பள்ளிக் கூடங்களை நடத்துவதற்கு முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இவ்வளவு வேண்டும், இவ்வளவு தேவை என்பதைத் தெரிந்து, அரசாங்கம் சீக்கிரம் இந்த மான்யத்தை அளிக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் இப்பொழுது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன்.

திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி

***184 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 பிப்ரவரி 12, 13 ஆகிய தேதிகளில் திருச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதற்கான செலவு எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Rs. 5,856.

திரு. து. ப. அழகமுத்து : இந்த விளையாட்டுப் போட்டி நடத்தப்பட்டபொழுது விவசாயக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. அதற்கான செலவு எவ்வளவு என்று கூறமுடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் விவரம் இல்லை.

Unsold books with Bureau of Tamil Publications

*185 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the value of the books in Tamil including translations and original works lying unsold with the Bureau of Tamil Publications set up by the Government of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The value of the books in Tamil including those released on 14th April 1966 in stock with the Bureau of Tamil Publications, is Rs. 10,02,745.50.

திரு. சா. கணேசன் : இம்மாதிரி அறிவியல் நூல்களை அச்சிட்டதும் முழுவதும் விற்றுவிட முடியாது என்பதும், பல வருஷங்களும் தொடர்ந்து படித்து வரும் மாணவர்களால் வாங்கப்பெற வேண்டிய காரணம் இருப்பதினாலே இவைகளை விற்பதற்குக் கால தாமதம் ஆகும் என்பதையும் கருதி, இத்தகைய வெளியீடுகளில்

[6th August 1966

போடப்படுகிற முதல் விரயமாகிறது என்ற கருத்துக் கொள்ளாமல், தொடர்ந்து இம்மாதிரி நல்ல வெளியீடுகள் வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு இம்மாதிரி நூல்கள் 1,000 பிரதிகள்தான் போடப்பட்டன. இப்பொழுது 2,000 பிரதிகள் போடுவது என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

Tenants of Sundaraperumal Koil

* 186 *Q*.—SRI K. R. SAMBANDAM : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any representation has been sent to Government on 21st February 1966 against their mirasdas, by tenants of Sundaraperumal Koil, Kumbakonam taluk, Thanjavur district, to the effect that they are unlawfully compelled to leave the Inam lands; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Only an unsigned petition was received from the villagers of Sundaraperumal Koil village stating that they are not able to apply for ryotwari patta for the lands cultivated by them for the reason that the village officers and the Revenue Inspector are being influenced by the inamdar.

(*b*) The petition was forwarded to the Assistant Settlement Officer, Thanjavur. It is reported that statutory enquiry for grant of patta in respect of Sundaraperumal Koil Vadapathi Padugai inam estate taken over by the Government will be taken up by the Assistant Settlement Officer after the survey records are received and that the representations of the villagers will be considered by him at the time of statutory enquiry either on application or suo moto as provided for under the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963).

திரு. கி. இரா. சம்பந்தம் : அங்கே அந்த மிராசுதார் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் தலைவராக இருப்பதன் காரணமாக சாகுபடி செய்யக்கூடியவர்களை சாகுபடி கூட செய்ய முடியாமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அது பற்றி அமைச்சர் அவர்களுக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும் மனுக்கள் கொடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை பற்றி தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பட்டா வழங்குவது சம்பந்தமான கேள்வி இது . . .

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன வென்று சொல்லவேண்டும். மொத்தமாக, "பெட்டிஷன் வந்திருக்கிறது, அதைப்பற்றி அமைச்சர் என்ன சொல்கிறார்கள்?" என்று கேட்கக்கூடாது. கேள்வியைக் குறிப்பாகவும், தெளிவாகவும் போடவேண்டும்.